
# திராவிட சினிமா 7

**கருத்து மக்களிடம் பற்றிக் கொண்டால் தீயாகப் பரவும் என்பதுபோல, திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். கல்வியில் முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த தலைமுறைக்குக் கொள்கை பேசிய கலைவடிவங்கள் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தன. அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

# திராவிடக் காதல் காவியம் ‘பொன்முடி’!


படங்கள் உதவி : ஞானம்





■ வீ.மா.ச.சுபகுணராஜன்

1945-ஆம் ஆண்டிலிருந்து சேலம் மாடர்ன் தியேட்டர்ஸுக்கும் பாவேந்தர் பாரதிதாசனுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. **‘அபூர்வ சிந்தாமணி’, ‘சுபத்ரா’, ‘சுலோசனா’, ‘வளையாபதி’** ஆகிய படங்களுக்குக் கதை வசனம் பாடல்கள் எழுதினார். **‘சுலோசனா’** திரைப்படமாக எடுக்கப்பட்ட நேரத்தில் திராவிட இயக்கம் தமிழ்மண்ணில் வேரூன்றிக் கொண்டிருந்தது. திராவிட இயக்கத்தின் வளர்ச்சியால் தமிழ் விரைந்து மறுமலர்ச்சியைப் பெற்றுக் கொண்டிருந்தது.

**‘இராவணன்’, ‘இரணியன்’, ‘இந்திரஜித்’** போன்ற இதிகாசப் பாத்திரங்கள் தமிழ் வீரர்களாக, பாவேந்தரால், மக்கள் முன் நிறுத்தப்பட்டனர். மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி. ஆர். சுந்தரத்துக்கு தமிழ் இலக்கியங்களில் அலாதியான பற்றும் ஈடுபாடும் உண்டு. ஐம்பெரும் காப்பிய வரிசையைச் சேர்ந்த குண்டலகேசியையும், வளையாபதியையும் வெற்றித் திரைப்படங்களாக எடுத்து வெளியிட்ட பெருமை அவரையே சேரும்.

அவரே மனோன்மணியம் சுந்தரனாரின் ‘மனோன்மணியம் ’ நாடகத்தையும் திரைப்படமாக்கினார். பாவேந்தரது காதல் காப்பியமான **‘எதிர்பாராத முத்தம்’, ‘பொன்முடி’** என்ற பெயரில் திரைப்படமானதும், மாடர்ன் தியேட்டர்ஸில்தான்.

## திராவிடக் காதல் காவியம்!

**‘பொன்முடி’**யில் எல்லீஸ் ஆர்.டங்கனின் முத்திரை தெளிவாக இருக்கும். திரைப்படத்தின் ஒற்றைவரிக் கதை இதுதான்: இளம் வயது முதலே நேசமாக வளர்ந்து காதலர்களானவர்கள், மாமன் மகன் பொன்முடி மற்றும் அத்தைமகள் பூங்கோதை. அவர்கள் தங்களது குடும்பப் பிணக்குகளையும் கடந்து தங்கள் மாறாத காதலால் இணைவதுதான் கதைக்களம். இந்தக் காதல் கதையைத் தனது கவிதை வரிகளாலும், திராவிடக் கருத்தியலாலும் காவியத் தளத்துக்கு உயர்த்தியது பாவேந்தர் என்றால், அதனைத் தனது நுட்பமான காட்சியமைப்புகளால் செழுமைப்படுத்தியது டங்கன் என்பேன். இன்றும் காண்போரை வியக்க வைக்கும் வண்ணம் திரைப்படமாக்கப்பட்ட காவியம் இது.

கதைக்களத்தின் போக்கே காட்சிகளாக மட்டுமே கட்டியெழுப்பப்பட்டிருக்கும். அதாவது திரைக்கதையே மையமானது. ‘மானா சோனா’ எனும் முத்து, வைர வியாபாரிகளான மைத்துனர்களின் கோபதாப காட்சிகள் மிகச் சிலவே. காதலர்கள் சந்திப்பும், அவர்களின் காதல் வசனங்களுமே படத்தின் முன் பகுதியை ஆக்கிரமித்திருக்கும். குமரகுருபரர் வருகையும் அதனையொட்டிய ஏற்பாடுகள், விழா, கூத்து, குமரகுருபரர் உரை என விரிகின்றன காட்சிகளில்.

மைத்துனர்களின் பிணக்கும்கூட பொது அரங்கில் அவர்கள் நேர்முகமாகப் பேசாமல் ‘இடைமனிதர்’ வழியாகப் பேசுவதாக நகைச்சுவையாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். காட்சி அழகுக்குக் காதலர்கள் சந்திப்பு, கருத்து வெளிப்பாட்டுக்கு சைவப் பெருந்தகை குமரகுருபரர் வருகையும் உரையும்.

> **சைவ நெறியை, தமிழ் நெறியாக்கி தமிழ், தமிழர் பெருமை, தமிழர் சமயம் மற்றும் அரசியல் பேசுவது கருதியே, குமரகுருபரர் உரை நிகழ்த்துகிறார்.**

## கவிதை நடை வசனங்கள்

டங்கன் இயக்கத்தில், பாவேந்தரின் காதல் மொழிதல்கள் காட்சியாக்கப்பட்டிருக்கும் விதம் அன்றைய தமிழ்த் திரைப்படங்களுக்கு முன்மாதிரியாக அமைந்திருக்கும். பாடல்களுக்கு, காதலர்கள் மலர்த் தோட்டங்களில் ஓடி ஆடும் காட்சிகளைவிட்டு, காதலர்களின் கவிதைநடை உரையாடல், நெருக்கம் மற்றும் அண்மைக் காட்சிகளாகவே (க்ளோஸ் அப்) காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். முழுக்காட்சியும் இந்தவிதமாக மாற்றி மாற்றி வைக்கப்பட்ட விதத்திலேயே வசனங்களின் இனிமைக்கும் குறைவேது.

காதலர்கள் இரவில் கடற்கரையில் சந்திக்கும் காட்சியின் ஒளியமைப்பு அந்த நாட்களில் அற்புதமாகப் பேசப்பட்ட ஒன்று. நிலவொளியில் வானத்தில் குளிரும் நிலவைப் பார்த்தபடி, கடல் மணற்பரப்பில் மல்லாந்து படுத்தபடி பேசுகிறார்கள், பாடுகிறார்கள். வானத்தில் ஒளிரும் நிலவைப் பார்க்காமல் அவன் முகத்தைப் பார்த்தபடி இருப்பவளை ‘வானத்தைப் பார்’ என்கிறான். ‘என் சந்திரன் இங்கே இருக்கையில் எனக்கெதற்கு வானத்து நிலவு’ என்கிறாள் காதலி. காட்சியின் இறுதியில் கேமராவும் ஒளியும் அவர்களை மட்டும் மிக நெருக்கமாகக் காட்டும் போது அவன், அவளை முத்தமிடுகிறான்.

## சைவ நெறியே தமிழ் நெறி

திரைப்படத்தில் குமரகுருபரர் வருகையின் மைய நோக்கம் சைவ நெறியை, தமிழ் நெறியாக்கி தமிழ், தமிழர் பெருமை, தமிழர் சமயம் மற்றும் அரசியல் பேசுவது கருதியே, குமரகுருபரர் உரை நிகழ்த்துகிறார்.

“அடிப்படையில் **‘அன்பே சிவம்’** என்பதை அடிப்படையாகக் கொண்டது நமது சைவ சமயம். ஆனால், அதனினும் தொன்மையானது நமது தாய்மொழியான இன்பத் தமிழ். உலகம் கண்ட முதல் மழலைப் பேச்சும், முதல் மொழியும் தமிழேயாகும். தமிழிலே காண்கிறேன் என் தலைவன் சிவனை. மூன்று கடல் சூழ்ந்தது தமிழ்நாடு.

அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலை ஈன்றது தமிழ்நாடு. வள்ளுவனை ஈன்றது தமிழ்நாடு. இலங்கும் உடலனைத்தும் ‘ஈசன் கோயில்’ எனும் அறநெறி கொண்டது நமது சமயம். நமது நாடு, மொழி, கலை, சமயம் ஆகியவற்றை வடவர்க்கு போதிக்கவே வடநாடு செல்கிறேன்”.

ஔரங்கசீப் சகோதரன் தாரா சிகோ கூட்டிய வேதாந்த கூடுகைக்கு, காசிக்குச் சென்ற குமரகுருபரரின் சமயநெறியை, தமிழ் நெறி என விளக்குகிறார் பாவேந்தர் பாரதிதாசனார்.

## வடவர் அறிவீனத்துக்குக் குட்டு

திராவிடர் அரசியலில் தமிழின் முதன்மையை, தமிழர் பெருமையைப் பேசுவதும், வடவர் அறிவீனத்தையும், ஏமாற்று மற்றும் சூழ்ச்சியையும் பேசுவது பாவேந்தர் பாணி. வணிகம் செய்ய, வடக்கே செல்லும் பொன்முடி உள்ளிட்ட வணிகர்கள், ‘பாருக்குள்ளே நம் புகழ் ஓங்கிடவே, வணிகம் செய்திடவே செல்வோம், செல்வோம் தில்லி செல்வோம்’ எனப் பாடியபடி படையெடுப்பு போல பயணம் மேற்கொள்கிறார்கள்.

‘ஜெய் மாகாளி, ஜெய் கபால பைரவி ஜெய் மகிசாசுரவர்த்தினி’ எனக் கூவியபடி வரும் காபாலிகர்களை எதிர்கொள்கிறார்கள். தென்னாட்டவர் கொடையில் சிறந்தவர்கள், அவர்களிடம் யாகத்துக்கு என்று இரந்து கேட்டால், பொன் தருவார்கள் என, ‘1,000 பசுக்களைக் கொன்று யாகம் நடத்த வேண்டும்’ என்று நயந்து பேசுகிறார்கள் காபாலிகர்கள்.

‘நாங்கள் தென்னாட்டார். கொலை வேள்வியை ஏற்பதில்லை. நீதியான காரியங்களுக்குப் பணம் கொடுக்க தமிழன் தயங்க மாட்டான். ஆனால், அக்கிரமமான யாகத்துக்குத் தர மாட்டான்‘ எனக் கொடை மறுக்கிறான் பொன்முடி.

வணிகர்களுக்கும் காபாலிகர்களுக்கும் சண்டை மூளுகிறது. பொன்முடி சிறை பிடிக்கப்பட்டு, பராசக்தி, தேவி மாகாளிக்குப் பலி கொடுக்க முனைகிறார்கள் காபாலிகர்கள். ‘போர் முறை தெரியாத வீணர்களின் தெய்வமா தேவி மாதா’ எனக் கேட்கும் பொன்முடியும், ‘ஏன் தேவி இந்த அநீதிக்கெதிராய் பேச மாட்டாயா?’ என்ற ‘திராவிடக் கேள்வியைக்’ கேட்கிறான்.

‘மனித வேட்டையாடும் உங்களது மாதாவிடம் ஒரு போதும் தமிழன் மன்னிப்புக் கேட்க மாட்டான்’ என சூளுரைக்கிறான். அடுத்த வணிகர் கூட்டத்தோடு, பொன்முடியைத் தேடி ஆண் வேடத்தில் வரும் பூங்கோதை தன் குழுவோடு சென்று, அவனை மீட்கிறாள். காபாலிகர் தலைவனை வீழ்த்தும் பொன்முடி ‘வெல்க தமிழர்’ என முழங்குகிறான்.

இறுதியாக, வடக்கிலிருந்து திரும்பும் குமரகுருபரர், சமாதானம் செய்து காதலர்களைச் சடங்கின்றி இணைத்து வைக்கிறார். 1950- ஆம் ஆண்டு பொங்கல் தினத்தன்று வெளியான இந்தப் படத்தில் நரசிம்ம பாரதி, மாதுரி தேவி, காளி என்.ரத்தினம், முத்துலட்சுமி ஆகியோர் நடித்திருந்தனர்.

...படம் விரியும்

---

## :ப்ளாஷ்பேக்




இராவணன்

### காலத்தால் அழியாத நினைவுகள்!

1993-ஆம் ஆண்டு கழகம் சந்தித்த பிளவு, தொண்டர்களிடம் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை, கட்சி பலமாகவே இருக்கிறது என்பதை உணர்த்த தலைவர் கலைஞரை அழைத்து கிணத்துக்கடவில் பொதுக்கூட்டம் நடத்தினோம். சுற்றுவட்டார கிராம மக்கள் குடும்பம் குடும்பமாக வருகை தந்தனர். மக்கள் வெள்ளத்தைப் பார்த்ததும், மகிழ்ச்சி அடைந்த தலைவர் கலைஞர் எங்களைப் பாராட்டினார். முத்தமிழறிஞரை வரவேற்று நான் உரையாற்றினேன். அப்போது எடுக்கப்பட்டது இந்தப் புகைப்படம்.

**-புலவர் இராவணன்,**
**தலைமைக் கழகப் பேச்சாளர்,**
**மயிலேறிப்பாளையம்,**
**கோவை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033 –24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## அஞ்சல் தலையிலும் உண்டு அரசியல்!



சுதந்திரத்துக்கு முன்பான இந்திய தேசத்தில் 43 சமஸ்தானங்கள், தங்களின் எல்லைப் பகுதிகளுக்குள்ளேயே கடிதப் போக்குவரத்துகளை மேற்கொண்டது மட்டுமல்லாமல், தங்களுக்கென தனியான அஞ்சல் தலைகளையும் வெளியிட்டுப் பயன்படுத்தி வந்திருக்கின்றன. அந்த வரலாற்றைக் கூறுகிறது சமீபத்தில் வெளியான **‘ப்ரின்ஸ்லி ஸ்டேட்ஸ் ஆஃப் இந்தியா: எ ஃபிலாடெலிக் ஓவர்வியூ’** என்ற புத்தகம். இதை சென்னையைச் சேர்ந்த ரொனால்ட்ஸ் நெல்சன் என்ற அஞ்சல் தலை சேகரிப்பாளர் எழுதியுள்ளார்.

இந்தப் புத்தகத்தில் கொச்சி, திருவிதாங்கூர் சமஸ்தானங்களைத் தவிர்த்து, இதர தென்னிந்திய சமஸ்தானங்கள் எதுவும் இடம்பெறவில்லை. பெரும்பாலும், வட இந்திய சமஸ்தானங்கள்தான் இந்த நூலில் உள்ளன. இது குறித்து, அஞ்சல் தலை சேகரிப்பாளர்கள் சிலர் கேள்விகளை முன்வைத்தபோது, அதற்கு இந்நூலாசிரியர் அளித்த பதில் சுவாரஸ்யமானது. “நிறைய பேர் என்னிடம் புதுக்கோட்டை போன்ற தமிழ்நாட்டு சமஸ்தானங்கள் ஏன் இந்தப் புத்தகத்தில் இடம்பெறவில்லை என்று கேட்கிறார்கள். அதற்குக் காரணம் ஒன்றுதான். ஆங்கிலேயர்கள் பெரும்பாலான தென்னிந்திய சமஸ்தானங்களுக்குத் தங்களுக்கென அஞ்சல் தலைகளை வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கவில்லை.


புதுக்கோட்டை சமஸ்தானத்தில் அஞ்சல் துறை சேவை இருந்தாலும், அதற்கென அஞ்சல் தலை இல்லை. இதைப் போலவே, மைசூர் சமஸ்தானத்துக்கும் அதே நிலைதான். தவிர, வட இந்திய சமஸ்தான மன்னர்களுக்குத் தங்கள் படம் பொறித்த அஞ்சல் தலைகளை மக்கள் பயன்படுத்த வேண்டும் என்ற ஆவல் இருந்தது. ஆனால், நம் தென்னிந்திய சமஸ்தான மன்னர்களுக்கு அப்படியான ஆர்வம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆக, வடக்கு, தெற்கு என்ற வித்தியாசம், இப்போது மட்டுமல்ல, ஆங்கிலேயர் காலத்திலும் இருந்திருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது” என்றார்.

### கருவூலம்

**நிதியெல்லாம் கல்விக்கே!**

**1972-ஆம் ஆண்டு ‘கலைஞர் அறக்கட்டளை’ தொடங்கப்பட்டது. தன் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளில் அளிக்கப்படும் தொகை அனைத்தையும் கல்வி வளர்ச்சிப்பணிகளுக்குச் செலவிடுவதையே கலைஞர் வழக்கமாக்கி இருந்தார். இந்த அறக்கட்டளை மூலம் கல்வி உதவிகள் வழங்குவது, இன்று வரை தொடர்கிறது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 129




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131